**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 89/2021**

**வாதி தரப்பு சாட்சி–5 தமிழரசி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 17.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழரசி | கிராமம் | கடவூர் |
| த/பெ / க/பெ. | மூர்த்தி | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 39 |

**முதல் விசாரணை**

1) நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனக்கு இவ்வழக்கில் சாட்சியளிக்க அழைப்பாணை வந்தது. சர்வே எண் 248/2 நிலவுடமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் பெரியசாமுந்தன் என்பவர் பெயரில் இருந்தது 4 ஏக்கர் 36 செண்ட் நிலத்திற்கு பட்டா இருந்தது. மேற்படி நிலம் நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் போது 4 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. சர்வே எண் 248/2ஏ என்பது பட்டா எண் 1277 ல் ஆர்.பேரான், சங்கப்பிள்ளை, மாரியாயி ஆகியோர் பெயரில் 23 ½ ஏர்ஸ் நிலமும், அதில் கூரைவீடு 4 என்றும் அ பதிவேட்டில் உள்ளது. சர்வே எண் 248/2பி என்பது பட்டா எண் 144 ல் பே.கருப்பன், பெயரில் 60.5 ஏர்ஸ் நிலமும் அ பதிவேட்டில் உள்ளது.

2) சர்வே எண் 248/2சி என்பது பட்டா எண் 1120 ல் பே.கருப்பன், ஆ.ஓந்தான் பெயரில் 4 ஏர்ஸ் நிலமும், கிணறு ஒன்றும் அ பதிவேட்டில் உள்ளது. சர்வே எண் 248/2டி என்பது பட்டா எண் 105 ல் ஆ.ஓந்தான் பெயரில் 88 ஏர்ஸ் நிலமும் அ பதிவேட்டில் உள்ளது. சர்வே எண் 248/2சி நிலத்திற்கு பட்டா மாறுதலாகியுள்ளது என்றால் சரிதான். யார் பெயரில் மாறியுள்ளது என்றால் கருப்பன் மனைவி மாரியாயி, கருப்பன் மகள்

பெரியக்காள், மகன் பெருமாள் பெயரில் மாறியுள்ளது. தொண்டமாங்கினம் கிராமம் ஆரம்பத்தில் குளித்தலை தாலுகாவில் இருந்து பிரிந்து கிருஷ்ணராயபுரம் தாலுகாவிற்கு மாற்றப்பட்டு, தற்போது கடவூர் தாலுகாவாக மாறியுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் தாவா சொத்து இருந்த போது வழங்கப்பட்ட பட்டாவா என்றால் ஆமாம்.

3) 105 பட்டா எண் ஆறுமுகம் மகன் ஓந்தான் என்பவருக்கு, சர்வே எண் 248/2டியில் 0.88 ஏர்ஸ் நிலமும், பட்டா எண் 244 குப்பன் மகன் சங்கப்பிள்ளை என்பவருக்கு 229/7பி, 7சி, 229/13, 236/1ஜி, 237/2எ, 237/2பி, 238/6ல் 2.19.08 ஏர்ஸ் எனவும், பட்டா எண் 1277 ஆறுமுகம் மகன் பேரான், ஓந்தான் மகன் சங்கப்பிள்ளை, கருப்பன் மனைவி மாரியாயி ஆகியோருக்கு சர்வே எண் 248/2எ ல், 0.23.5 ஏர்ஸ் நிலமும், 1393 பசலியில் உள்ளதாக வா.சா.ஆ.2ல் வழங்கப்பட்டுள்ளது என்றால், அதுபற்றிய ஆவணங்கள் என்வசம் இல்லை. சர்வே எண் 248/2டி யில் ஆறுமுகம் மகன் ஓந்தான் பெயரில் இருந்து கருப்பன் மனைவி மாரியாயி, மகள் பெரியக்காள், மகன் பெருமாள் ஆகியோர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டு, பெருமாள் இறந்த பின்னிட்டு டி.ஆர்.எண் 2019/0103/14/090071T.R. தேதி.17.05.2019 ன் படி பெருமாள் வாரிசுகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

4) சர்வே எண் 248/2டி யில் பழைய பட்டா எண் 105ல் இருந்து, அதே பட்டா எண்ணில் ஆறுமுகம் மகன் ஓந்தான் பெயர் நீக்கம் செய்யப்பட்டு, கருப்பன் வகையறா பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 105ல் இருந்து ஓந்தான் பெயர் நீக்கப்பட்டதற்கான உத்தரவு ஆர்.டி,1352 தேதி.29.08.2013 என மேற்குறிப்பு மட்டும் எங்கள் பதிவேட்டில் செய்யப்பட்டுள்ளது. அதற்கான கோப்புகள் எங்கள் அலுவலகத்தில் இல்லை.

மேற்படி கோப்புகள் வட்டாட்சியர் அலுவலகத்தில்தான் இருக்கும். நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு உள்ள அ பதிவேடு **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தில் சர்வே எண் 248/2டி ஓந்தான் பெயரில் உள்ளதற்கான அ பதிவேடு, **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1 முதல் 4, 6 முதல் 12 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

**இல்லை**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**